**மாதிரி வினாத்தாள்**

நிறுமங்கள் - I - பகுதி I

12th Standard

**வணிகவியல்**

Reg.No. :

I.அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
II.நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கு பயன்படுத்த வேண்டும்
II.வினா எண் 14- ற்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.

Time : 01:00:00 Hrs

Total Marks : 85

## பகுதி - அ

5 x 1 = 5

1) ஒரு கூட்டுப் பங்கு நிறுமத்தைப் பதிவு செய்தல்

(a) கட்டாயமாக்கப்பட்டுள்ளது (b) நிறுமத்தின் விருப்பத்திற்குட்பட்டது

(c) பொதுவரையறை நிறுமத்தைப் பொறுத்தவரை கட்டாயம், தனி வரையறை நிறுமத்தைப் பொறுத்தவரை அதன் விருப்பத்திற்குட்பட்டது

(d) பொதுவரையறை நிறுமத்தின் விருப்பத்திற்குட்பட்டுள்ளது. தனி வரையறை நிறுமத்திற்கு கட்டாயமாக்கப்பட்டுள்ளது

2) பொது வரையறை நிறுமத்தில் குறைந்த அளவு உறுப்பினர்களின் எண்ணிக்கை

(a) 2 (b) 3 (c) 7 (d) 10

3) தனி வரையறை நிறுமத்தில் பங்குதாரரின் பொறுப்பு

(a) பங்குகளின் செலுத்தப்பெற்ற மதிப்பளவாகும் (b) பங்குகள் மீது செலுத்தப் பெறாதிருக்கும் மதிப்பளவாகும்

(c) தனிப்பட்ட சொத்துக்களின் அளவாகும் (d) பங்குகள் மீது கோரப்பட்ட தொகை அளவாகும்

4) தனி வரையறை நிறுமம் ஒன்று

(a) தொழில் கூட்டுருவாக்கச்சான்றிதழ்(certificate of incorporation) பெற்றவுடன் (b) தொழில் தொடக்கச் சான்றிதழ் பெற்றவுடன்

(c) பதிவாளரிடமிருந்து தான் தேர்ந்தெடுத்துள்ள நிறுமப் பெயருக்கு ஒப்புதல் கிடைத்தவுடன்

(d) பதிவாளரிடம் நிறும அமைப்பிற்குரிய அனைத்து ஆவணங்களையும் தாக்கல் செய்த பின்னர் தொழில் தொடங்கலாம்

5) நிறுமமொன்றின் வாழ்வுக்காலம் முடிவுக்கு வருவது எப்பொழுது எனில்

(a) அதன் தோற்றுவிப்பாளர்கள் அனைவரும் இறந்தவுடன்

(b) அதன் இயக்குநரவையில் உள்ள இயக்குநர்கள் அனைவரும் இறந்தவுடன்

(c) முதலில் இருந்த மிகவும் அதிகமான உறுப்பினர்கள் தங்கள் பங்குகளைப் பிறருக்கு மாற்றிக் கொடுத்துவிட்டால்

(d) மேற்சொன்ன எச்சூழ்நிலையிலும் முடிவுக்கு வராது

## பகுதி - ஆ

5 x 1 = 5

6) ......................... எனும் சொல் உருவாக்கப்பட்ட அல்லது நிறுவப்பட்ட அமைப்பு என்ற பொருளை உணர்த்தும்.

7) ....................... என்பது, ஒரு குறிப்பிட்ட சட்டத்தின் கீழ், அச்சட்ட விதிமுறைகளின்படி உருவாக்கப்பட்ட அமைப்பு எனப்படும்.

8) ................ ஒரு சட்டம் உருவாக்கிய நபர் (சட்ட நபர்) என்று கருதப்படுகிறது.

9) ....................... மாற்றமோ ......................... மாற்றமோ நிறுமத்தின் நீடித்த வாழ்வைத் தடைப் படுத்துவதில்லை.

10) நிறுமத்தின் மேலாண்மை, பங்குநர்கள் தங்களுக்கிடையே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் ...................... ஒப்படைக்கப்படுகிறது.

## பகுதி - இ

5 x 4 = 20

11) தனி வரையறை நிறுமம் - வரைவிலக்கணம் தருக .

12) ஒப்புறுதி நிறுமம் (Guarantee company) என்றால் என்ன ?

13) அரசு நிறுமம் என்றால் என்ன ?

14) a) அமைப்பு முறை ஏட்டில் இட அமைப்புக் கூறு (Situation Clause) யாது சொல்லப்பட்டிருக்கும் ?

**(OR)**

b) நிறுமச் செயல்முறைகளில் எவை குறித்து குறிப்பிடப்பட்டிருக்கும் ?

## பகுதி - ஈ

4 x 8 = 32

15) நிறும அமைப்பு முறையின் சிறப்புத் தன்மைகளை சுருங்கக் கூறுக.

16) ஒப்புறுதி நிறுமம் குறித்து குறிப்பு வரைக.

17) பிடிப்பு, துணை - நிறுமங்கள் பற்றி விளக்குக.

18) கூட்டு உருவாக்கச் சான்றிதழ் பெறுவதற்குச் தாக்கல் செய்ய வேண்டிய ஆவணங்கள் பற்றி சுருக்கிக் கூறுக.

## பகுதி - உ

1 x 20 = 20

19) தனி நிறுமம் - பொது நிறுமம் வேறுபாடுகள் :

******************************************